# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண்.**9/2016** நாள் **26.08.2016**

**உள்ளாட்சி தேர்தல் – வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி – தேசிய தகவல் மைய அலுவலர்களுடன் ஆலோசனை**

தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலம் அக்டோபரில் முடிவடைவதால் அப்பதவியிடங்களுக்கு புதிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சாதாரணத் தேர்தல்களை நடத்துவதற்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தேர்தல் பணிகளை விரைவுப்படுத்தியுள்ளது.

உள்ளாட்சித் தேர்தல் 2016–க்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் தயாரிப்பது குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் சார்பில் சென்னை தேசிய தகவலியல் மையத்திலிருந்து காணொலி ஒளிக்காட்சி மூலம் (Video Conference) அனைத்து மாவட்டங்களிலும் உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள தேர்தல் அலுவலர்கள் மற்றும் கணினி உதவியாளர்களுக்கு சென்னை தேசிய தகவலியல் மையத்தின் முதுநிலை தொழில்நுட்ப இயக்குநர் திரு.சீனிவாசராகவன், முதன்மை திட்ட ஆராய்வாளர் திரு.ஜெயபலான் மற்றும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய முதன்மை தேர்தல் அலுவலர்கள் திரு.ஜா.சம்பத் (ஊராட்சிகள்), திரு.மா.இளங்கோ (நகராட்சிகள்), கணினி நிரலர் திரு.எஸ்.விஜயராமன் மற்றும் திட்ட ஆராய்வாளர் திரு.மு.நாசர் பாஷா அவர்களால் 22.08.2016 அன்று மாதிரி பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இப்பணி 31.08.2016–க்குள் முடிவடைய கள அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

ஆ. கிரைசர் 26/08/16

மக்கள் தொடர்பு அலுவலர்